RECEIVED 1989-6-19 Periodicals Division Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
'NATIONAL TAMIL DAILY'

மலர்: 31 | ஆனி 4 | துல்ஹஜ்ஜா 13 | இதழ் 31
யாழ்ப்பாணம் | ஞாயிற்றுக்கிழமை | 18-06-1989

## யாழ். நகரில் 'கிரனேட்' துப்பாக்கி வேட்டுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் இரவும், நேற்றும அங்குமிங்குமாகத் துப்பாக்கி வேட்டு, 'கிரனேட்' குண்டு வெடிப்புதுன் இடம்பெற்றன.

நேற்று முன்தினம் இரவு சுமார ஏழு மணியளவில் ஈச்சமோட்டை, பழைய வீதிச் சந்தியில் துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டன.

நேற்று நண்பகல் கொய்யாத்தோட்டத்தில் 'கிரனேட்' குண்டு வெடிப்பு, துப்பாக்கி வேட்டுச் சத்தங்கள் கேட்டபோதிலும் சேதம் எதுவும் ஏற்படவில்லையென்று தெரிவிக்கப்பட்டது.

யாழ். நகரில் பஸ்நிலையப் பக்கமாக நேற்றுப் பகல் ஒரு மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தைத் தொடர்ந்து சுமார் அரைமணி நேரம் நகரில் பதற்றம் ஏற்பட்டபோதிலும் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.

இச்சம்பவத்தில் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

### இந்திய அமைதிப்படை வெளியேற்ற விவகாரம்

# இலங்கை ஜனாதிபதி கோரிக்கை:

# 48 மணி நேரத்தில் இந்தியா பதில்

(நமது வெளிநாட்டு செய்திச் சேவை)

இலங்கையில் நிலைகொண்டுள்ள இந்திய அமைதிப் படையை இந்தியாவுக்குத் திருப்பி அழைக்கவேண்டும் என்ற இலங்கை அரசின் கடுமையான கோரிக்கை சம்பந்தமாக, அடுத்த நாற்பத்து எட்டு மணி நேரத்தில் இந்தியா தனது நிலைப்பாட்டைத் தெரிவிக்கும் என்று புதுடில்லியில் நேற்றிரவு ராஜீய மட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி, வவுனியாவில் இளைஞர்கள் விசாரணை

(யாழ் பாணம்)

கிளிநொச்சி, வவுனியா பகுதிகளில் நேற்று இளைஞர்கள் பலர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

இச்சம்பவத்தில் சிலர் விடுதலை செய்யப்பட்டதாகவும், பலர் தடுத்து வைக்கப்பட்டதாகவும் அறியப்படுகிறது.

**சாவகச்சேரியில்**

சாவகச்சேரியில் இளைஞர் ஒருவர் நேற்று துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இறந்தவரின் சடலம்

(8-ம் பக்கம் பார்க்க)

## 'இந்தியப் படையினரின் வெற்றிப்பணி'க்கு பாதுகாப்பு அமைச்சர் பாராட்டு

(புதுடில்லி)

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை ஒழுங்காகவும் பயனுள்ள வகையிலும் நிறைவேற்றப்படுவதை உறுதி செய்வதற்கு இந்தியா கடமைப்பட்டுள்ளது.

இவ்வாறு இந்திய பாதுகாப்பு அமைச்சர் திரு கே. சி. பந்த் தெரிவித்துள்ளார்.

இந்திய - திபெத் - நேபாள எல்லையில் துருப்புக்கள் மத்தியில் பேசுகையிலேயே திரு. பந்த் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியப் படையினர் மாலைதீவிலும் இலங்கையிலும் மேற்கொண்ட வெற்றிகரமான

(8-ம் பக்கம் பார்க்க)

## 3 பொலிசார், இராணுவவீரர் தீவிரவாதி பலி!

(கொழும்பு)

தென்பகுதியில் இடம்பெற்ற மூன்று வெவ்வேறு தாக்குதல் சம்பவங்களில் மூன்று பொலிஸார், இராணுவ வீரர் ஒருவர் உட்பட ஐவர் கொல்லப்பட்டதாகவும், நான்கு பேர் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8ம் பக்கம் பார்க்க)

## தெற்கில் புதிய இயக்கம்: ஆறுபேர் கொலை!

[கொழும்பு]

தென்பகுதியில் கடந்தமூன்று தினங்களில் புதிய தீவிரவாதக் குழு ஒன்றினால் ஆறுக்கும் மேற்பட்டோர் சுடப்பட்டும் குத்தியும் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

''தேசப்பிரமி சன்டா பால் கெயா'' (டி. எஸ். பி.) என்ற இந்தத் தீவிரவாதக் குழுவே இக்கொலைகளை மேற்கொண்டதாகவும், கொல்லப்பட்டவர்களுக்கு அருகில் உரிமை கோரும் அட்டைகள் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

## இராணுவ பொலிஸ் நடவடிக்கையின்போது மனிதஉரிமை மீறப்பட்டால் நஷ்டஈடு

### எம்,பிக்கள் சங்கக் கோரிக்கைக்கு பிரதமர் இணக்கம்

(கொழும்பு)

இராணுவ, பொலிஸ், நடவடிக்கைகளின்போது கைது செய்யப்பட்டு பல வித்திலும் இன்னலுற்றவர்களுக்கும் மனித உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட இருக்கிறது.

இராணுவ பொலிஸ் நடவடிக்கைகளின்போது பல்வேறு சந்தர்ப்பங்களிலும் பல வழிகளிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மனித உரிமைகள் மீறப்பட்டவர்களுக்கும் நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கம் வகிக்கும் மனிதஉரிமைகளைப் பாதுகாக்கும் சங்கம் விடுத்துள்ள கோரிக்கையை பிரதம மந்திரி திரு. டி. பி. விஜயதுங்கா கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டுள்ளார்.

இதுதொடர்பான விபரங்களுடன் தமது சிபார்சையும்

(8-ம் பக்கம் பார்க்க)

## நெல்லியடியில்

[வடமராட்சி]

நெல்லியடியில் கடந்த நான்கு நாட்களாக வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நெல்லியடி வர்த்தகர்கள் இருவர் சுட்டுக் கொலைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து நெல்லியடி வர்த்தக நிலையங்கள் யாவும் தொடர்ந்து பூட்டப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

## பருத்தித்துறையில் ஷெல், துப்பாக்கிச்சூட்டு சம்பவம்

[பருத்தித்துறை]

பருத்தித்துறை வியாபாரி மூலையில் நேற்று நண்பகல் இடம்பெற்ற ஷெல் தாக்குதல், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் இருவர் பலத்த காயமடைந்தனர்.

இவர்கள் பின்னர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவங்களையடுத்து பருத்தித்துறையிலுள்ள சகல கடைகளும் மூடப்பட்டன. வாகனப் போக்குவரத்தும் ஸ்தம்பித்தது. நகரும் சற்று நேரத்தில் வெறிச்சோடியது.

பருத்தித்துறையில் சிலநாட்களாகப் பதற்றம் நிலவிவருவது தெரிந்ததே.

### தேடுதல்

பருத்தித்துறை - பருத்தித்துறை வீதியில் நேற்று அதிகாலை [illegible] [illegible] தீவிரப்படுத்தப்பட்டிருந்தது.

## ஜே.வி.பி. முக்கியஸ்தர் கைது

(கொழும்பு)

ஜே.வி.பி. தலைவர் ரோகண விஜயவீராவின் உரைகள் பதிவுசெய்யப்பட்ட ஒலிப்பதிவுநாடாக்களுடன் அமைப்பின் முக்கியஸ்தர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

தென்பகுதியில் ஜே.வி,பி.யின் ஒலிபரப்புச் சேவைக்குப் பயன்படுத்தி வந்த ஒலிபரப்புக் கருவிகளும், பல சாதனங்களும் இவரிடமிருந்து கைப்பற்றப்பட்டதன் மூலம் ஒலிபரப்புச் சேவை பெருமளவு தடைப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## சீனாவில் மேலும் எண்மருக்கு மரண தண்டனை!

(பீக்கிங்)

சீனாவில் மேலும் எட்டுப் பேருக்கு உயர் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

விவசாயத் தொழிலாளர்களான இந்த எட்டுப்பேரும்: இராணுவ தளபாடங்களைத் திருடியது, அரச சொத்துக்களைச் சேதப்படுத்தியது, அரச படைகளைத் தாக்கியது போன்ற குற்றங்களுக்காக இவர்களுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை மாணவர் தலைவர் மூவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டது தெரிந்ததே.

## நாளை பேச்சுவார்த்தை

[கொழும்பு]

வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டு வரும் இ. போ. ச. ஊழியர்

(8ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

பதனிடப்பட்ட பம்பாய் வெங்காய விதை (Country of Origin Holland) விற்பனைக் குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். கிளை: மல்லிகா ஸ்டோர், மாங்குளம். சி-2947

Hisex, Golden Comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், கறுப்பு சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வாரமும் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி லேன், கொக்குவில். (சி 2726)

Nallur Farm Centre. prima Lohmann வெள்ளை சிவப்பு பேட்டுக் குஞ்சுகள், Broiler குஞ்சுகள், சேவற் குஞ்சுகள், Golden Comet பேட்டுக்குஞ்சுகள் Hyline கறுப்பு, வெள்ளை பேட் க்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய்/புதன் கிழமைகளில் பெற்றுக்கொள்ளலாம். தடுப்புமருந்துஒவ்வொருவெள்ளிக் கிழமைகளில் இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள். C/o நல்லூர் வீடியோ சென்டர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி-2798)

வைத்தியர்களினால் சிபார்சு செய்யப்பட்ட நீரழிவு வியாதிகளுக்கு உகந்த வறுத்த கோதுமை அரிசிக் குறுணல், வறுத்த கோதுமை, றவை, கோதுமை அரிசியில் அரைத்த ஆட்டாமா எங்களிடம் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். M. G. M. 777, K. K. S. Rd. & 208, 1st Cross St. Jaffna. சி-2929

விற்பனையாகிறது முப்பொருள் உண்மை விளக்கம் 2ம் பதிப்பு இந்துநாகரீகம் கற்கும் G. C. E. A/L மாணவர்களுக்கும் சைவசமய அபிமானிகளுக்கும் ஓர் அரிய நூல் ஆசிரியர் மு. இளையதம்பி கிடைக்குமிடம்: சோதிடவிலாஸ் புத்தகசாலை, காந்தளகம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-2978)

தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல் நெறியும், ஆண்டு 7, 8, 9 இந்நூல்கள் மொழித்திறன், அடிப்படை இலக்கணம், தொடரியல், பாடநூல்கள், செயல் நெறிகள் என்பனவற்றுடன் தேர்வு வினாத்தாள்களும் கொண்ட புதிய வெளியீடாகும். திறமைச்சித்திக்கு மாணவர்களுக்கு இது ஒருகை விளக்கு. வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம். (சி-2971)

## தேவை

வெற்று சீமெந்து பாக்குகள் (Bags) தேவை. மில்க் வைற், யாழ்ப்பாணம். (ஏ-292)

சிங்கப்பூரில் உள்ள ஒரு குடும்பத்திற்கு ஆங்கிலம் விளங்கக்கூடிய ஒரு கிராமத்துப்பெண் (20-35 வயது) வீட்டுப் பணிப்பெண்ணாக தேவை, ~~த. ஆரைசிங்கம்~~ (கனகரத்தினம் மகாவித்தியாலயம் முன்பாக) 376/B, நாவலர் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (சி-2977)

யாழ்நகரில் உத்தியோகம் பார்க்கும் கம்பனி முகாமையாளருக்கு சகல வசதிகளுடன் அறை வாடகைக்கு தேவை. கராஜ் வசதியும் விரும்பத்தக்கது. விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், விளம்பர இல. சி-2973 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-2973)

## பரீட்சை

SLAS பரீட்சைக்குரிய நுண்ணறிவு (பொதுஉளச் சார்பு), கிரகித்தல் ஆகிய புதிய நூல்கள் வெளிவந்துவிட்டன, விடய ஆய்வு விரைவில் வெளிவரும். க. குணராசா, SLAS ஸ்ரீலங்கா புத்தகசாலை/பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம். சி-2933

## கல்வி

S. K. ஜீவமோகனின் O/L கணித வகுப்புக்கள் அதிசித்தி பெற தொடர்புகொள்க: ஸ்ரார் பியூப்பில் அக்கடமி, கல்வியங்காடு. [தனிப்பட்ட முறையிலும் கல்வி பெறலாம்] [சி-2794]

## மணப்பந்தல்

யாழ் உயர் இந்து வேளாள குல பொறியியலாளர் மணமகனுக்கு பெற்றோர் அழகிய படித்த விரிவுரையாளர், கணக்காளர், அல்லது பொறியியலாளர் மணப்பெண்ணை தேடுகிறார்கள். மணப்பெண்ணின் வயது 38க்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். சாதகம், சீதனம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல:- C. 2939 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (சி. 2939)

## மணப்பந்தல்

இந்து கோவிய வகுப்பைச் சேர்ந்த பெற்றோர்கள் கணக்காளராயிருக்கும் மகனுக்கு 30 வயது வரையிலுள்ளவரும், அழகும் இனிய சுபாவமுள்ள பெண்ணை தேடுகிறார்கள். ஆங்கிலத்தில் நல்ல தேர்ச்சியுள்ள பட்டதாரி ஆசிரியை கணக்காளர் (Partly Qualified), மருந்தாளர் விரும்பத்தக்கது. சம்பந்தப்பட்ட முழுவிபரங்களை சாதகக்குறிப்புடன் முதற்கடிதத்திலேயே விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-2953, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (சி-2953)

# நன்றி நவிலல்

07-06-89 இல் நிகழ்ந்த எமது திருமணத்திலும் 08-06-89 இல் நிகழ்ந்த வரவேற்பிலும் கலந்துகொண்டவர்கள், உள்நாட்டிலும், வெளிநாடுகளிலுமிருந்து வாழ்த்துக்களும், அன்பளிப்புக்களும் வழங்கியவர்கள், பல்வேறு உதவிபுரிந்தவர்கள் அனைவருக்கும் உளங்கனிந்த நன்றி உரித்தாகுக.

வசீகரன் - மதிவதனு.

11, சிவப்பிரகாசம் வீதி,
யாழ்ப்பாணம். (சி 2974)

யாழ்ப்பாணத்தில் சகலவிதமான இறக்குமதி செய்யப்பட்ட திருமண பிறந்ததின விழா அழைப்பிதழ்களுக்கும், தேசிய கடதாசிக் கூட்டுத்தாபன உற்பத்திகளுக்கும் பாடசாலை, காரியாலய உபகரணங்கள், மின்சார அலங்காரப்பொருட்களுக்கும் நியாயமான ஸ்தாபனம்:

# அம்பலவாணர் அன் சன்ஸ்,

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
(ஏ 276)

# நவீன வீடுகள் நிர்மாணித்தல்

சகல வசதிகளையும் கொண்ட வீடுகளையும், கட்டிடங்களையும் (House & Building Plan) உங்கள் திருப்திக்கேற்ப வரைந்து நிர்மாணித்துக்கொள்ளவும். மதிப்பீடு, கணியங்களும் (Estimate & Quantity) செய்துகொள்ளவும்.

இத்துடன் ஒரு மணி நேரத்தில் Blue Print பிரதிகளைச் செய்துகொள்ளவும்.

தொடர்புகொள்ளவும்:

**A. Murugesampillai & Co.**
**ENGINEERS & CONTRACTORS**
1st. FLOOR LALITHA BUILDING,
213, KASTHURIAR ROAD, JAFFNA.
(C 2979)

# நினைவு கூருவோம்



கஜன்

பாதையில் - நீ பதித்த சுவடுகள்
எம் இதயங்களில் ஊசலாடும் நினைவுகள்
எமது கண்ணீரை உமது கல்லறைக்கு
காணிக்கையாக்கி உமது இலட்சியப்
பாதையில் இணைகின்றோம்.

[illegible]

மாணவ மணிகளின் மாணிக்கம்!
பரீட்சைத் தேர்வில் புதுமைப் புரட்சி!
பரீட்சையில் தேர்வு பெறுவோர்
தேடிக்கொண்டது!
இதோ வெளிவந்து விட்டது.

**திரு. ரி. நாகரத்தினம்** B. S. C. (Cey)
அவர்களின்

# அசேதன இரசாயனத்தின்

மின்னல் வழிகாட்டி
சகல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்
பிரதிக்கு முந்துங்கள்.

தொடர்புகள்:
ரி. திருச்செல்வநாதன்
இல. 195, 3-ம் குறுக்குத்தெரு,
(ஏ 293) யாழ்ப்பாணம்.

# ஆங்கிலம்

## பேச வேண்டுமா?

கூச்சமின்றி சரளமாக ஆங்கிலத்தில் பேச வேண்டுமா? பிறரைப்போல் நீங்களும் ஆங்கிலம் சரளமாகக் கூச்சமின்றிப் பேச ஆசைப்படுகிறீர்களா? கவலையை விடுங்கள்! புதுமையான முறையில் தபால் மூலம் தமிழில் ஆங்கிலம் படியுங்கள். எளிய அஞ்சல் வழிப்பயிற்சி. தமிழ் தெரிந்த யாவரும் சேரலாம்.

## Bright Training Centre இல் படித்த மாணவர்களின் கருத்து

O மூன்று மாத கால பயிற்சியை முடித்ததும் எனக்குள்ளேயே ஒரு பெரு மகிழ்ச்சி உருவாவதை காணக்கூடியதாக இருக்கிறது. காரணம் என்னவெனில் இப்போது எனக்கு ஓரளவாவது ஆங்கிலம் பேச முடிகின்றது என்பதுதான். உங்களது பயிற்சியை இன்னும் முழுமையாக முயற்சிசெய்து படித்தால் ஆங்கிலம் பேச முடியும் என்ற நம்பிக்கை எனக்கு தற்போது வந்துவிட்டது. இதற்காக உங்களுக்கும் உங்கள் கல்வி நிலையத்திற்கும் எனது உளமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

அப்துல் சலாம் அலி சப்றி
நீரோட்டமனை, சீனன்குடா.

O இம் மூன்று மாதங்களும் அருகே இருந்த ஒருவர் சொல்லித் தந்து விளக்குவதிலும் பார்க்க அமோகமான வெற்றியை உங்களின் இந்த முயற்சி பெற்றுள்ளது. என்னில் இருந்தே நான் கண்டுகொள்கிறேன். தற்போது எனது நிலைமை சரளமாக ஆங்கிலத்தை பேசக்கூடியதாக இருப்பதுடன் ஆங்கில மொழிமூலம் நடைபெறும் வகுப்புகளுக்கும் சென்று அறிவை வளர்க்கக்கூடியதாக உள்ளது. இத்தனை பெருமைகளையும் குறுகியகாலத்திற்குள் ஈட்டித்தர வைத்த பிறைட் பயிற்சி நிறுவனத்திற்கு எனது நல்வாழ்த்துகள்.

எம். ஏ. சி. அமீர் அலி
173, புதிய சோனகத்தெரு,
கொழும்பு - 12.

O உங்கள் ஆங்கில கல்வியின் சிறப்பம்சம் பாடங்களை தெளிவாக எடுத்துரைப்பது தபால்மூலம் இவ்வளவு சிறப்பாக செய்கிறீர்களானால் நேரடி கல்வி மூலம் எவ்வளவு சிறப்பாக செய்வீர்கள்.

செ. தமிழ்செல்வன்
இலக்கம் 318, திருகோணமலை வீதி,
கண்டி.

O உங்கள் நிறுவனத்தினரால் அறிமுகப்படுத்தப்பட்ட ஆங்கில வகுப்பில் சேர்ந்து கற்ற எனக்கு நல்ல பலாபலனை அளித்துள்ளது என்பதை மிகவும் நன்றியுடன் அறியத்தருகின்றேன்.

செல்வி சத்தியதேவி பஞ்சாட்சரம்
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

O இக்காலத்தில் நிலவும் தபால் தடைகளிலும் தங்களது பணி இடையூறு காணுது தாங்கள் சேவை புரிந்தமைக்காக பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். தங்களது சேவை தொடர்ந்து தமிழ் மக்களுக்கு கிடைக்கவேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனம்
54, விபுலானந்தர் வீதி, யாழ்ப்பாணம்.

எமது கல்வித்திட்டம் பற்றி மேலதிக விபரங்கள் அறிய முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்புகொள்க:

**BRIGHT TRAINING CENTRE,**

P. O. Box 162, COLOMBO.
(பி-277)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

வைத்த நிதிபெண்டீர் மக்கள் குலம்கல்வி என்னும்
பித்த உலகில் பிறப்போடு இறப்பென்னும்
சித்த விகாரக் கலக்கம் தெளிவித்த
வித்தகத் தேவர்க்கே சென்றூதாய் கோத்தும்பீ

— திருவாசகம்

# நமது நோக்கு

## மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி....!

மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி என்ன? இத்தகைய பெருமையுடையவனைப் பெற்றெடுக்க இவன் தந்தை என்ன தவம் செய்திருக்க வேண்டுமென்று பிறர் வியக்க வாழ்ந்துகாட்டலேயாகும் என்பதே வள்ளுவர் வகுத்த வழி. நன்றி செலுத்தவேண்டாம்: ஓர் உதவியாகவே இப்படி வாழ்ந்துகாட்டுங்கள்என்று விநயமாகக் கேட்கின்றார்.

ஆனால் இன்று நாம் மக்கள் தந்தைக்குஆற்றவேண்டிய சிறு நன்றிக் கடனை வலியுறுத்த வேண்டியுள்ளது. எம்மை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்தியபெற்றோருக்கு நன்றிசெலுத்தவேண்டிய கடப்பாட்டை நினைவுபடுத்தவேண்டியுள்ளது.

''தந்தைதாய் பேண்!'', ''அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்!'', ''மாதா, பிதா, குரு தெய்வம்'' போன்ற பல அறிவு மொழிகளை இன்றைய மாணக்கர் மனப்பாடம் செய்துவருகிறார்களா என்பதே கேள்விக்குறி. இன்றைய கல்விக் கொள்கையில், புரியாததை இளசுகளின் மூளைக்குள் திணிக்கக்கூடாது என்பதை, அறமொழிகள் விஷயத்திலும் அச்சொட்டாகப் பின்பற்றுவதால் ஏற்படும் பின்விளைவு இது.

இன்றைய விஞ்ஞானஉலகிலே குடும்ப உறவுகள், பாச உணர்ச்சி, கீழ்ப்படிவு, போன்ற பல விழுமியங்கள் உரிய இடத்தைப்பெறுகின்றனவா? மேலை நாடுகளிலே தோன்றிய விடுதலைஉணர்ச்சிகள் கல்வியிலே: கலையிலே பல புரட்சிகளை ஏற்படுத்திவிட்டு சமூகத்திலும், குடும்பத்திலும் புகுந்து பல தொல்லைகளை விளைவித்து வருவதை மறுப்பார் எவர்?

என்றுமே மாறக்கூடாத அடிப்படை அறநெறி ஒழுக்க நெறிகளில் இன்றைய சமுதாயம், புதிய விளக்கங்கள் என்று கூறத் தொடங்கி, ஆய்வுகள் நடாத்தத் தொடங்கி இன்று அவற்றின் கட்டமைப்பிற் சில சீர்கேடுகளுக்கு வழிவகுத்துவிட்டன என நாம் வருத்தத்துடன் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது.

சமுதாயஇடைவெளியை அறியாது புதுமைவாதம் பேசுவதில் பயனில்லைஎன்ற முணுமுணுப்பும் எமக்குக் கேட்பதுண்டு.

போலி மயக்கத்தில் இருப்போர்க்குச் சில உண்மைகளை நாம் சுட்டிக்காட்ட வேண்டும், நோய் தொடங்கிய இடத்தில், அது நீங்கும் அறிகுறி தெரிகிறது. அதாவது டியூவி போன்ற தத்துவஞானிகள் தோன்றி சுதந்திர சித்தாந்தத்திற்கு வித்திட்ட இடம் அமெரிக்கா.

அங்கிருந்து வெளிவந்தது ஒரு ஏற்பாடு. அமெரிக்க நாட்டைச் சேர்ந்த பெண்மணி யோண் புறாஸ்டொட் அவர்கள் சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்டார், அந்த அம்மையாருக்குத் 'தாயுமானவராக' இருந்து வளர்த்துவிட்ட தந்தையாருக்கு நன்றிக் கடன் செலுத்தத் 'தந்தையார் தினம்' தொடங்கினார்.

இதன் சிறப்பையுணர்ந்த அமெரிக்க ஜனாதிபதி வில்சன் அவர்கள், 'மகன் தந்தைக்காற்றும் நன்றிக்கடன் நாளாக இத்தினத்தைக் கொண்டாடும்படி நாட்டு மக்களுக்கு 1919 ல் பிரகடனப்படுத்தினார்.

இன்று 'தந்தையார் தினம்' ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் மூன்றாவது ஞாயிற்றுக்கிழமையில் உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகின்றது. வெளிநாடுகளில் வசிப்பவர்கள்கூட வாழ்த்துமடல்கள் அனுப்பி வருகிறார்கள் இத்தினத்தில்.

எமது மூதாதையர்கள் வகுத்துவிட்ட சில கொள்கைகளில் பிதிர்க்கடன், ஆண்டுத் திதிகள் போன்ற பலவுண்டு. சீனா, ஜப்பான், போன்ற நாடுகளிலே பெற்றோருக்கு நன்றிக்கடன் செலுத்துவதில் ஆண்டுதோறும் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டுவதை நாம் அறிவோம்.

வந்துபோக முடியாமல் வெளிநாடுகளில் வசிப்பவர்கள், வீடியோமூலம் எடுத்த இறுதி மரியாதையைப் பார்த்துவிட்டு, கண்ணீர் விடுவதோடு கடமை முடிந்துவிட்டது என்று கருதமாட்டார்கள் என நம்புகிறோம். உணர்ச்சிபூர்வமாக நன்றிக் கடமையை தமது பெற்றோருக்குச் செலுத்த வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

## இரட்சிக்க வாருமையா

பாலகன் இயேசுவை பாங்காய் கரத்தினில்
ஏந்திய எம்அந் தோனி யார்
காலத்தை வென்றவர் கருணை பொழிபவர்
காணாத செல்வத்தைக் காட்ட வல்லார்
ஞாலத்தின் தேவனே! ஞானத்தின் தந்தையே
நாடு செழிக்கவும் நல்லவர் வாழவும்
ஓலத்தின் மத்தியில் ஒற்றுமை உண்டாக்கி
உலகத்தை இரட்சிக்க வாரு மையா.

- நவாலியூர் நாவுக்கரசன்.

(இன்று மானிப்பாய் அந்தோனியார் உற்சவம்)

# நச்சுவாயகி - நயினைநாயகி

### கனகசபாபதி நாகேஸ்வரன் எம். ஏ.

(விரிவுரையாளர் - தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)

''பணிமலர்ப் பூங்கணையும் கரும்புச்சிலையும் பாசாங்குசமும் கையிலணையும் திரிபுர சுந்தரி'' என்று அம்பிகை வருணிக்கப்படுகின்றாள்.

திருமந்திரம்,

''வாரணி கொங்கை
மனோன்மணி மங்கலி
காரணி காரியமாகக்
கலந்தவள்
வாரணி ஆரணி வானவர்
மோகினி
பூரணி போதாதி போதமு
மாமே''

என்று அம்பிகையின் திருப்பெயர்களை நிரற்படுத்துகின்றது. லலிதா சகஸ்திரநாமம் ''ஸர்வமந்திர ஸ்வரூபிணி'' 'ஸர்வதந்ரரூபா' என்று வழுத்துகின்றது. சக்தியின் பேராற்றல்களும்குண நலன்களும்அருள்வளமும்அவளதுதிரு பெயர்களிலே யமைந்திருக்கும் சிறப்பு நலத்தினைக் காணுவ தவசியம். ஏனெனில் தாய்க்குரிய குணச்சிறப்பினைக் கொண்டவளும், உலகையீன்ற நாயகியாயும் மிளிருபவள் அன்னை நாகபூஷணி. அலைகடல் ஒலிசெய்துஆரவாரஞ் செய்யவும், அடியார்கள் கண்களில் நீர்சொரியத் துதிசெய்யவும் எழுந்தருளியிருந்து அருளாட்சி புரிந்துவரும் அம்பிகைவேண்டுவார் வேண்டும்வரங்களையெல்லாம் வாரிவழங்குபவள். நயினையில் உறையும் நாகபூஷணியைப்பணிந்து வேண்டுவார் பெறும் பேறுகள் அளவில.

''பூரணியைத் தனுகரண
புவன போகங்கள்
தமைப் புரக்கு மாயா
காரணியைப் பசுவாச
மலமகல மெஞ்ஞானக்
கண்ணில் தோன்றும்
ஆரணியைப் பரமசிவனா
னந்த நடத்தின் வைத்த
வருட்கண்ணாளைச்
சீரணிகொற்பொழிற்றில்லைச்
சிவகாமசுந்தரியைச்
சிந்தை செய்வாம்'.

என்று அம்பிகையைச் சிந்தை செய்துதுதிசெய்யும் பாடலொன்று பிரமோத்ர காண்டத்தில்வருகிறது. சிவத்தையடையச்செய்பவள் சக்தி. ''சிவஞானப்ரதாயினி'' என்று புகழப்படுபவள் நயினை நாகபூஷணி. 'பார்வதி' என்ற பெயர்உலகப்பொருள்களனைத்திலும் வதிபவள் என்ற பொருளிலே பெருவழக்காகப் பயிலப்படுவது.

''திங்கள் ஈராறும் தினங்
கள் ஓரேழும் திருப்
பெயரை
எங்கிருந்தாலும் புகல்வேன்
நான் செல்லும் இடங்
கள் எல்லாம்
மங்களம் பொங்கி மர
போங்கி வாழ வரம்
தருவாய்
நங்கை சிவகாமி அம்மா
அகிலாண்ட நாயகியே''

என்பது அகத்திய மாமுனிவரருளிய பாசுரமாகும். எங்கெங்கு சென்லினும் அங்செல்லாம் நின்று காப்பாற்றியருளும் பேரருளுக்குச் 'சக்தி' என்று சிறப்பாகக் குறிப்பிடத்தகும் நிலையினை பக்திநிலை நிற்போர் நன்குணர்வர். இதனையே பாரதியாரும் ''எங்கெங்கு காணினும்சக்தியடா, ஏழுகடல் அவள் வண்ணமடா'' என்று பாடினார். 'ஏழாற்றுப் பிரிவு' என்னும் கடலின் அணித்தாயிருந்து ஆன்மாக்களது நெஞ்சத்துட் புகுந்துதன்னை அடைந்துவழிபடுவோருக்கு ஆறுதல்கொடுத் துய்விக்கும் மூலபண்டாரப் பெருநிதியம் நயினை நாகபூஷணி அம்பாள்.

[illegible] நெஞ்சம் [illegible] என்று பாடுகிறார் கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை. அம்பிகை- பராசக்தி- கலைவாணி- தேவி என்றெல்லாம் போற்றப்படுவது யாதெனில் ''விவேகமலர்ச்சி'' என்னும் புத்தி விலாசமும்விரிவுமாகும். 'சித்த அறிவே' தெய்வமெனப் போற்றிய மரபு பாரதியின் பாமரபு. இத்தகு நலங்கொழிக்கப் பாடிய பாரதி, அன்னை பராசக்தியை நோக்கி வேண்டுதல் செய்பவராகி நின்று,

''சொல்லடி சிவசக்தி எனைச்
சுடர்மிகும் அறிவுடன்
படைத்துவிட்டாய்
வல்லமை தாராயோ—இந்த
மாநிலம் பயனுற வாழ்
வதற்கே''

என்று பாடுகின்றார்.

மேலும்நமக்கின்றுள்ள பெரும் பிரச்னை 'அஞ்சிஉயிர் வாழ்தல்' அருணகிரி நாதப்பெருமான் முருகனைத் துதித்துப் பாடும் பொழுதெல்லாம் 'யமபயம்' அவரை இடைக்கிடை பிடித்துள்ளது. திருப்புகழிலே ''காலனெனையணுகாமலுனதிரு காலில் வழிபட அருள்வாயே'' என்று இரந்து நிற்கின்றார்.

''நெஞ்சிற்கவலை நிதமும்
பயிராக்கி
அஞ்சி உயிர்வாழ்தல்
அறியாமை-தஞ்சமென்றே
வையமெலாங் காக்கும்
மகாசக்தி நல்லருளை
ஐயமறப் பற்றல் அறிவு'':

என்பது பாரதியின் அறிவியற் கொள்கை-

அன்னையானவள் சமூகத்தின் நற்பழக்கங்களை ஊட்டி வளர்ப்பவளாவாள். ஆதிகாலச் சமுதாய வளர்ச்சியில் 'தாய்மை' முக்கிய பங்கு வகித்து வழிபாட்டிலும் பிரதான பங்கினைப் பெற்றிருந்தது. சிந்துவெளிப்பண்பாடு இவற்றினை நிரூபித்திருக்கின்றது. நிலம் (பிருதுவி) தாயாகக் கருதப்படும் மரபு விஞ்ஞான ரீதியாகவும், மருத்துவ ரீதியாகவும் ஆதிகாலமுதலே நிரூபிக்கப்பட்டுள்ளமை மனங்கொள்ளத்தக்கது. இன்றும் தாங்கும் வல்லமை நிலத்திற்கும் பெண்களுக்குமுரியதனித்தன்மையென்று கொள்ளலாமல்லவா? பிறவற்றினுக்கில்லாத் தனி உயர் மதிப்பு 'பொறுமை'யென்னும்குணத்திற்கு வழங்கப்படுகின்ற 'கற்றறிஞர் திறன்' உய்த்துணரத்தக்கது. அறிந்துபெருமையும்-பெருமித முங்கொள்ளத்தக்கது.

சிலப்பதிகாரம் துர்க்கையைப் பற்றி விபரிக்கின்றது. மணிமேகலையில் சம்பாபதி, காடுகிழாள், விந்தியாவாசினி, சிந்தாதேவி என்னும் பெயர்கள் தெய்வங்களைக் குறிப்பனவாயின. வரலாற்றுரீதியில் ஆரம்பத்தில் தனித்த - முக்கியத்துவம் பெற்ற தாய்மைத் தத்துவமே காலகதியில் ஆண்மைத் தத்துவத்துடன் கலந்தது. அவ்வாறு ஆண்-பெண் தெய்வீகக் 'கலப்புநிலை' தோன்றிய காலகட்டத்து விக்கிரகங்களாக கல்யாணசுந்தரேசர், அர்த்தநாரீஸ்வரர், சோமாஸ் கந்தமூர்த்த மென்பனவற்றினைக் கொள்ளலாம்.

(7-ம் பக்கம் பார்க்க)

# எங்கும்உன் ஆடலடி தாயே

- சுவாமி பித்துக்குளி முருகதாஸ் -

**10-05-72 ல் நயினாதீவு நாகபூஷணி அம்பாள் சந்நிதானத்தில் சுவாமிகள் இயற்றிப் பாடிய கவிப்பா...**

அம்மா அம்மம்மா
எங்கும் உன் ஆடலடி தாயே அம்மா
பொங்கும் கடல் நயினையிலே
பொற்பதங்கள் தழுவுதம்மா
(எங்கும் உன் ஆடலடி)

தங்கி உன்னைக் காட்சியின்பம் சந்நிதியை
அடைந்துவிட்டால்
சங்கரி, தயங்கரி, காப்பவளே கருமாரி
(எங்கும் உன் ஆடலடி)

சூழலும் யாழும் கேட்பர் உயிர் கொடிநீ அறிவாய்
மழலைமொழி புகழும் மக்களுடன் நீ ஆடுவாய்அம்மா
(எங்கும் உன் ஆடலடி)

அழநான் துவங்கி விட்டால் அம்மா ஓடி
வந்தெடுத்தாய்
அழகெல்லாம் அழகெலவோ அணிந்திடுவேன் அழகே
(எங்கும் உன் ஆடலடி)

ஆதி பராசக்தி ஜே ஆதி பராசக்தி
ஆதி பராசக்தி ஜே ஆதி பராசக்தி

காலையில் தெண்கதிராம் உச்சி வேளையில்
வெண்கதிராம்
மாலையில் செங்கதிராம் இனிமை நீல வானத்திலே
(ஆதிபராசக்தி)

தண்கதிச் சந்திரனும் அம்மா வெருண்டோடும்
அந்தகார பொழுது
கண்கள் கிமிட்டுதல்போல் என் அம்மை
விண்ணினில் காணப்படுவாயானால்
(ஆதி பராசக்தி)

இன்பதுன்ப மெல்லாம் என்அம்மை செய்யும்
இந்திரசாலமம்மா
அன்பெனும் பாசம் கொண்டால் என்அம்மை
சொன்னபடி கேட்பாள்
(ஆதி பராசக்தி)

மாயை திரைமறைவில் என்அம்மை
ஆணும் பெண்ணும் ஆவாய் என்றாலும்
நீயே கெதியென்றால் என்அருமை தாயுருவாய்
நிற்பாள்
(ஆதி பராசக்தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நயினை அம்பாள் அருள் அனைவர்க்கும் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்''

விடியோ படப்பிடிப்பாளர்

**சிவாஜி லக்ஷ்மிஸ்**

424. கே. கே. எஸ். வீதி,

யாழ்ப்பாணம்.

அம்பிகையின் ஆசி அனைவருக்கும் கிட்டட்டும்!

**"அல்பா" சமையல் எண்ணெய்**

(கொழுப்புத்தன்மை அற்றது என சர்வதேச மருத்துவர்களால் சிபார்சு செய்யப்பட்டது)

பி. ஸி. ஸி. உற்பத்திப் பொருட்கள்
எவரெடி பற்றறிகளுக்கு
நாமே பிரதம முகவர்கள்.

**எஸ். சின்னத்துரை பிறதர்ஸ்**

25, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 22703 — 22108

நாகபூஷணித் தாயே நல்லருள் புரிவாய் அம்மா!

எமது ஸ்தாபனத்திற்கு யாழ்ப்பாணத்தில்

**122, மின்சாரநிலைய வீதி, சிமாட்டி**
**158, நவீன சந்தை சிமாட்டி பென்சி**

தவிர வேறு கிளைகள் இல்லை என்பதையும் வேறு சிமாட்டி ஸ்தாபனங்களோடு செய்யும் கொடுக்கல் வாங்கல்களுக்கு நாங்கள் பொறுப்பாளிகள் இல்லை என்பதையும் வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

(1)

**சிமாட்டி**

(ஜவுளி மற்றும் ஆடம்பரப் பொருட்களின் விநியோகஸ்தர்கள்)

122, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(2)

**சிமாட்டி பென்சி**

158, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

**ஓம் சக்தி**

தனந் தரும் கல்வி தரும் ஒரு நாளும்
தளர்வறியா
மனந் தரும் தெய்வ வடிவுந் தரும்
நெஞ்சில்வஞ்சமில்லா
இனந்தரும் நல்லனஎல்லாம் தரும்
அன்பர் என்பர்க்கே
கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்
கண்களே.

தினமும் அபிராமி அந்தாதி படியுங்கள்.

25 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி
அபிராமி அந்தாதி
என்னும் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

**மில்க்வைற்**

யாழ்ப்பாணம்.

# நயினை நாகபூஷணி அ...

## அலைகடல் நடுவில் அருளாட்சி

மகான் ஆதிசங்கரரால் மணித்துவீபம் என்றும் மணிமேகலை காப்பியத்தால் மணிபல்லவம் என்றும் போற்றப் பெறுவது நயினையம்பதி. அறுபத்தி நான்கு சக்திபீடங்களிலிருபெரும் பீடங்களாய புவனேஸ்வரி பீடமும், காமயோகினி பீடமும், ஒன்றிச் சங்கமமாய அருட்கீர்த்தி பெறும் தலம் நயினை. இங்கு அருளாட்சி புரிகின்ற அன்னை ஸ்ரீபுவனேஸ்ரி என்றும், ஸ்ரீ நாகேஸ்வரி என்றும், நாகம்மாள் என்றும், ஸ்ரீ நாகபூஷணி என்றும் மகாநுபவர்களால் போற்றப்படுபவள்.

ஸ்ரீலலிதா (சகஸ்ர) ஆயிரந் திருநாம அர்ச்சனைமாலையில் வரும்– ''பணி பதிவேஷ்டித சோபித லிங்கம்' என்று சொல்லப்படுகின்றதாகிய பாம்பினுற் போர்க்கப்பட்ட தான்தோன்றி லிங்கம், நயினையைத்தவிர உலகில் வேறு எந்தத் தலத்திலும் இல்லை என்பது ஆய்வறிஞர் முடிவு. இங்கு வதிந்துறையும் அன்னை ஸ்ரீநாகபூஷணிக்கும் அலையாழி அறி துயில்கின்ற திருமாற்கும்-ஆதிசேடர்க்கும் மிக நெருங்கிய வரலாற்றுத் தொடர்பு உண்டு என்பது பலருக்கும்தெரியாதஉண்மை. இத்தலத்தில் வைகின்ற ஸ்ரீ நாகபூஷணியார், சிவசக்தியின் சொரூபமானவர். இதனுலன்றே அன்னைக்குப் பதிகம் பாடிய வரகவி முத்துக்குமாருப் புலவர் தமது ''நாகேஸ்வரிப் பதிகம்'' பாடல்கள் முடிபுகளனைத்திலும், ''ஏக சிவ நாகயீஸ்வரி அம்மையே'' என உளநைந்துருகி வாழ்த்தும் பாங்கு நினைவுகூரற்பாலது.

இங்குள்ள அன்னையின் சில பரம ரகசியங்களைப்பற்றி ஸ்ரீ காமகோடி பீடம்ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகரானந்த சரஸ்வதி சுவாமிகள் கூறிய ஒரு சில கருத்தை இங்கு அருள் வேண்டி நாடிவரும் அடியார்கள் உணர்ந்து போற்றியுய்ய கூறிவைக்க விரும்புகின்றேன். முன் ஒரு காலத்தில் கற்பக தருக்களால் !சூழ்ந்த இத்துவீபம் பிரளயத்தின் அந்தத்தில் அருடருசோலையாக (அருள்தரு-வேம்பு) மாறிற்று என்றும், பிரளயத்தில் எஞ்சிய தவசிரேட்டர்கள் இத்தலத்தில் என்றும் அன்னையைப் பூஜித்துவருகிறுர்கள் என்றும், உலக தோற்றப் படைப்பு-நாத உற்பத்தி ஆய காரணங்கட்கு காரணியான அன்னை இங்கு என்றும்விரும்பி உறைபவள் என்பதும் அவளது அளப்பருங் கருணையின் சாட்சியாக விளங்குபவன் மகாலட்சுமியும், ஆதிசேடனும் பிரமனும், சரஸ்வதியும், தேவகோடிகளும் இங்கு எழுந்தருளிட ஸ்ரீ திருமாலினுல் தேவிக்குரிய பீடம் இங்கு அமைக்கப்பட்டது. (திருமாலும், மகாலட்சுமியும் தங்கிய பிரதேசம் இன்று வல்லிக்காடு என அழைப்பது கவனித்தற்பாலது.) ஆகவே இந்திரனமைத்த அமைப்பித்த இப்பீடத்தின் முதற் பூசகர் திருமால் என்பதும் அகண்ட பரஞானமூர்த்தியாய ஆதிசேடனின் ஆத்மார்த்தமூர்த்தி ஸ்ரீநாகபூஷணியே என்பதும், ஆதிசேடனின் விருப்பால் அவனை தனது மாலையாயும் தனக்குக் குடையாயும் ஏற்றுக்கொண்டவளும் தனது வாகனமாய் ஆதிசேடனை ஆசனமாய்க் கொண்டவளும் முத்தொழிற் தலைவியாயும்

### நயினை நா. வி. மு. நவரத்தினம்

(இராமநாதன் நுண்கலைத்துறை - யாழ்.பல்கலைக்கழகம்)

சமுத்திரராஜன் (அலையாழி) என்பதும், இங்கு உவந்து வந்து தரிசிப்போர், உடற்பிணி, பவப்பிணியினின்றும் விடுபட்டு அன்னையின் பரிபூரண கிருபைக்கு ஆளாவர் என்பது உறுதி என்பதும், இதன் சாட்சியாகமிளிர்பவன் பிரமகத்திதோஷத்தினின்றும் விடுபட்ட இந்திரன் என்பதும் [ஆபுத்திரனைகுதினுல்இந்திரன் இத்துவீபத்தில் உயிர் துறக்க வைத்தவன்.] இந்திரனது வேண்டுதற்படி திருமாலும் சக்தி தலங்களுக்கெல்லாம் சக்தி அளிப்பவளும், அச்சக்தியைத் திரும்ப தன்னில் ஒடுக்கிக் கொள்பவளுமாய பரப்பிரம்மமான மகாசக்தியே இவ்வலைகடலில் அருள்தரு சோலையில் அமர்ந்து இருப்பவள் என்பது சுவாமிகள் கருத்து.

எனவே அடியார், பெருமக்கள் தம்பிறவிப்பிணி உடற்பிணி அறுக்க அன்னையை அண்டி அவள் திருப்பாதாரவிந்தங்களை உள்ளன்போடு இறைஞ்சி இப்பிறவியின் கிடைத்தற்கரிய பயனை எய்துவார்களாக. இத்தலத்தில் இன்னுமொரு சிறப்பு-அமுதசுரபி என்ற அன்னசாலை பசிப்பிணியையும்அந்நாட்போளின்னுளும் தீர்ப்பது திருவருட்சக்தியின் பேரருள் விலாசத்தை மேலும் மெருகூட்டுவதாகும்.

''நயினை நாகபூஷணித் தாயே
நல்லருள் புரிவாய் அம்மா!''

**கண்ணன் லொட்ஜ்**

பல்கலைக்கழகச் சந்தி

திருநெல்வேலி.

நயினையம்பதியில் குடிகொண்டு
அருள்பாலிக்கும் நயினை நாகபூஷணியம்பாள்
பக்தர்களுக்கு நல்லருள் பாலிக்க இறைஞ்சுகிறோம்.

யாழ்ப்பாணத்தில் இருபது வருடங்களுக்கு மேலாக
அசல் 22 கரட் தங்கநகைகளை வழங்கிவரும்
ஒரே ஸ்தாபனம்

O கண்கவர் அழகிய புதிய டிசைன்களில் நகைகளை ஓடருக்கு செய்துகொடுப்பவர்கள்

நிதானவிலை! கட்டித் தங்கம்!! வர்ணவேலைப்பாடு நகைகளுக்கு

**கே.கே.வி. யாழ்ப்பாண நகை மாளிகை**

**K. K. V. JAFFNA JEWELS HOUSE,**

84, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 021 - 22362.



### நாகபூஷ...

உயிரிலுக் கு...
ஊமுடை...
துயிலுந் து...
துன்புமிக்...
புயலிடைத்...
தெலித்...
நயினையில் ...
நகபூ...
- ...

## வடம் பி...

''அலைகடற் கரைசே...
அம்பாளின் ஆல...
அருளமுது பெருகு...
அதை வந்துபருகு...
தேனை அருள் பெ...
தெய்வமகள்...
திருத்தேரில் வரும்...
வரும் அ...

பால்நினைந்தூட்டும்...னும் சாலப் பவுள்ள... நாயகியாகிய நாகே... கருணைத் திருக்காலத்... வானளாவிய அலங்... தேரின் மீது மகே... மாகவீற்றிருந்து பக்தர்... அருள் புரியும் காட்... காணில் கருங்கல் ... கசிந்துருகும் அவ்வாறு... அற்புதக்காட்சி - ஆ... காட்சி நினைந்து நி... நெக்கு நெக்கு உருகவே... காட்சி.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அம்மன் சிறப்பு மலர்



## அன்னை பராசக்தி

ஐயா. ஸச்சிதானந்தம்

இமயம் தொட்டு குமரி இலசபரந்த தமிழ்நாடு. எவ்வளவு தொன்மையுடையதோ அவ்வளவு தொன்மையுடையது நயினதீவு. கொடுங்கடல் கொண்டகுமரிக்கோடும் பஃறுளியாறும், பன்மலையடுக்கமும் சிதைந்து புதைந்து சீரழிந்த போது மறைந்து போனவை போக குறைந்து நின்ற நிலப் பரப்பில் சிறந்து நிற்பவை ஒரு சிலவே. அவற்றில் ஆறு மைல் சுற்றளவுடன் அலைகடல் நடுவே, நிலைபெற்று நிற்பது இலங்கையின் வடபால் அமைந்துள்ள சப்ததீவுகளில் ஒன்றான நயினதீவு.

இயற்கையின் கொந்தளிப்பால் குறுகிப்போன குமரிக் கண்டத்தின் பலபிரிவுகளில் ஒருபிரிவு ஈழமென்றால் அதன் நெற்றியல் இட்ட குங்குமதிலகம் போன்றது நயினை–நயினதீவு. நயினை தெய்வமணங்கமளும் சிறுதீவு, நினைப்பிற்கு எட்டாத நெடுங்காலமாக அன்னை பராசக்தியின் அருள் வளங்கொளிக்கும் அருந்தீவு.

### நாகவழிபாடும் நயினைத் தொடர்பும்

நாகவழிபாடு இந்தியாவின் பழங்குடிகளுள் மட்டுமல்ல, இலங்கையிலும் கி. மு. ஆறும் நூற்றாண்டில் இலங்கையின் மேற்குக் கரைகளில் ஆதிக்கம் பெற்றிருந்ததாக 'பழந் தமிழர்' என்றநூலில் விவரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் வாழ்ந்த இயக்கர், இராக்கதர் நாகர் என்போர் ஆதிதிராவிடர். இவர்களில் சிறப்பும் மதிப்புடைய செந்தமிழரே நர்கர்கள். இவர்கள், இலங்கையில் கந்தரோடை, நாகர் கோவில், நயினதீவு, களனி மாதோட்டம் பகுதிகளில் அரசாட்சி செய்தது மட்டுமல்ல, நாகவழிபாட்டிற்கும் துணைபரிந்தனர் எனலாம், நயினதீவில் விளங்கிய அரசநிலைபேறுடையதாகவும், தலையாய அன்னை நாகராஜேஸ்வரியின் தலைவாசலாகவும் விளங்கிறது. அன்றிலிருந்து நயினதீவில் நாகவழிபாடு சிறந்து விளங்கிவந்துள்ளது.

நயினதீவில் எழுந்தருளியிருக்கும் அன்னை பராசக்திக்கு நாகம்மாள், நாகாச்சி. நாகராசேஸ்வரி, நாகேஸ்வரி நாகபூசணி என்னும் திருநாமங்கள் உண்டு. நாகர்கள் அனுஷ்டித்த நாகவழிபாடு இன்று இலங்கையில் வேறுஎங்கும் இல்லாதவகையில் நயினையில் மட்டும் நிலைத்துவிட்டது.

அன்னையின் ஆலயத்தில் சுயம்புவாய் அமைந்துள்ள

(7-ம் பக்கம் பார்க்க)

### நாகபூஷணியே! காப்பாய்

உயிரினுக் குடமைக் கஞ்சி
உளமுடைந் துருகி, நித்தந்
துயிலிலுந் துளக்க முற்றுத்
துன்புமிக் குடையோ ராய், நாம்
புயலிடைத் துரும்பே போன்று
பேதலித் தரற்று கின்றோம்;
நயினையில் வாழ்வு கொள்ளும்
நாகபூ ஷணியே! காப்பாய்.

- வெண்பாமணி முருககூரியன்

## ...ம் பிடிக்க வாரீர்

...ற் கரையோரம்
...ளின் ஆலயத்தில்
...து பெருகுதையா
...வந்து பருகுமையா
...அருள் பொழியும்
...தெய்வமகள் அவள்
...ரில் வரும் போது
சேரும் அருள்''

...ந்தூட்டும் தாயி
... பரிவுள்ள உலக
...ப நாகேஸ்வரி
...திருக்கோலத்துடன்
...ப அலங்காரத்
...தது மனோரஞ்சய
...நந்து பக்தர்களுக்கு
...யும் காட்சியைக்
...கருங்கல் மனமும்
... அவ்வாறான ஓர்
...ட்சி – ஆனந்தக்
...னைந்து நினைந்து
...க்கு உருகவேண்டிய

... ஆலயவனப்பும்
...தர் வரிசைகளும்
... அடியார் இசைக்
...முறைகளும் பண்
...வேத மந்திரசுலோ
... விண்ணைப் பிழக்
...மணி ஓசையும் உண்
...க்கும் உவப்பான
...அமுதும் அம்மா
...டியாது. 'சொல்லுக்
... பராசக்தி, சூரத்
...எல்லாம்'' என்று
...ாடியதன் மாட்சி
... ஆட்சி செய்கின்
...ாம்.

...டிப்பார் நெஞ்சில்
...க்கும் அன்னை
...ானளாவிய சித்தி
... ஏறிமனோரஞ்ஜனிய
...ிருந்து, தம் புதல்வர்
... வண்ணத் தேரும்
...க முன்செல்ல, தன்
...செல்லும்'' காட்சி
...க் கண் ஆயிரம்

...ம் ஓடம் எல்லாம்
... ஒலிக்க கடலா
...லலையா என மக்
...திரத்தில் வண்ணத்
...ரிசையாக மிதந்து
...அக்காட்சியைக்காண



''நாலாயிரம் கண் படைத்திலனே அந்த நாயகியைக் கண்டு தேன்'' என அபிராமிப்பட்டர் கூறியதுபோன்று நாமும் நாலாயிரம்கண்கேட்டு அந்த அன்னையைத் துதித்து எம் துன்பத்தைப் போக்கி நல்லன எல்லாம் பெற்று வாழ்வாங்கு வாழ்வோமாக.

### கிருஷ்ணசாமி கிருபானந்தா


''தேரேறிவரும் நயினை நாகபூஷணி
தாரணி நம்பினோர்க்கருள்வாய் அம்மா''

மலாயன் கபே
பெரியகடை,
யாழ்ப்பாணம்.



செஞ்சடையும் திருமுடியுங் கண்டோ மம்மா
செங்கதிர்வீ சுனதுமுகங் கண்டோ மம்மா
தஃசமென வந்ததிரு வடியாருக்குத்
தமைபொழியும் திருவிழியுங் கண்டோ மம்மா
பஞ்சசிரச் செஞ்சரவக் குடையும் கண்டோம்
பார்த்துமனங் களிகூர்ந்தோம் அருவிற் றாளாம்
கொஞ்சுமலைக் கடலருகே கோயில் கொண்ட
கோமகளே நயினைநகர் நாகம் மாளே!!
அனைவருக்கும் நலம்பெற வேண்டுகிறோம்.

அம்பலவாணர் அன் சன்ஸ்

196, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



நயினை அம்பாள் அருள் அனைவருக்கும்
கிடைக்கப் பிரார்த்திக்கின்றோம்!

இன்றே நாடுங்கள்!

0 மங்கள வைபவங்களை நவீன விடியோ உபகரணங்களால் படமாக்கவும்,

0 டி. வி, டெக், விடியோ கமெரா போன்றவற்றை சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும்,

சிறந்த ஸ்தாபனம்

எவர்விஷன்

21, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.



தேரேறும் தேவி அருள் வேண்டி நிற்போம்!

எம்மிடம்

0 கேக் தயாரிக்கும் பொருட்களும்

0 பேக்கரிக்குத் தேவையான சாமான்களும்

0 சிறிய, பெரிய அளவுகளில் குளோப் பட்டரும்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
நியாயவிலையில் பெற்றுக்கொள்ளலாம்.

ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ்

141, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.



ஒருநாளும் தளர்வறியா மனம் தரும்
நயினை அன்னையவள் பாதம் பரவுவோம்!

செறமிக் கோப்பறேசனின் வடபகுதி ஏகவிநியோகஸ்தர்களான எம்மிடம் சகலவிதமான உள்நாட்டு வெளிநாட்டு செறமிக் உற்பத்திப் பொருட்கள், சுவருக்குப் பதிக்கும் மாபிள் கற்கள் ஆகியனவும் மற்றும் மின்சாரப் பொருட்கள் குளிர்சாதனப் பெட்டிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

நியூ விமாக்கி

(செறமிக், மின்சாரப் பொருட்களின்
விநியோகஸ்தர்கள்)

27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நாகபூஷணித் தாயே நல்லருள்
புரிவாய் அம்மா!"

**த. அருளானந்தம் (அருள்)**
**குடும்பத்தினர்**

7, சேர் பொன் இராமநாதன் வீதி,
நாச்சிமார்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

அலைகடல் மோதக் கலைக் கடலாகிக்
கருணை மழை பொழியும் காவற்தெய்வமே
அருள் தருவாய்!

உங்கள் தேவைக்கு நாடுங்கள் எங்களை

றேடியோ, ரி. வி., வீடியோ உதிரிப் பாகங்கள்
ட்ரூன்ஸ்போமர் கொயில் வைன்டிங்
வீடியோ படப்பிடிப்புகள்
இவற்றுடன்

சகலவிதமான மின்சாரப் பொருட்களும்
திருத்திக் கொடுக்கப்படும்.

**மினி ட்ருன்ஸ் சென்ரர்**
ஜே. எம். ஜி. கட்டடம்.
3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## ஆலய உற்சவம்

(சுண்டுக்குளி)

ஆனைக்கோட்டை ஸ்ரீமூத்த நயினார் ஆலய வருடாந்த மஹோற்சவம்நாளை 19ம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

பகல் பதினொரு மணியளவில் இடம்பெறும் கொடியேற்ற வைபவத்தைத் தொடர்ந்து பதினறுதினங்கள் நடைபெறும் இவ்விழாவில் எதிர்வரும் ஜூலை மாதம் 2ம் திகதி ரதோற்சவமும் 3ம் திகதி தீர்த்தோற்சவமும் மறுநாள் பூங்காவனமும் இடம்பெறும்.

## மகவம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

மகவம் பட்டறையின் 31-வது சந்திப்பு இன்று ஞாயிற்றுக்கிழமை திரு. வேல் அமுதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

ஊரெழு மதி அக்கடமியில் நடைபெறும் இச்சந்திப்பில் 'கட்டிட உள் அலங்காரக்கலை' என்னும் பொருள் பற்றி பொறியியலாளர் திரு. அ. மதிமுகன் விரிவுரை நிகழ்த்துவார். (ஆ)

## கருத்தரங்கு

(மாவிட்டபுரம்)

பழை கிராம மக்கள் அபிவிருத்திச் சங்க ஆதரவில்கருத்தரங்கு ஒன்று இன்று ஞாயிற்றுக்கிழமை வீமன்காமம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கிராமத்தின் குறைபாடுகளை போக்குவதற்கான வழிமுறைகள் பற்றி இக்கருத்தரங்கில் ஆராயப்படவிருக்கிறது.

பல்வேறு அரச அதிகாரிகளும், நிறுவன உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொள்வர்.

**அறிவொளி**
**பிறைட் கல்வி வட்டம்**

எமது கல்வி வட்டமானது உயர்தர மாணவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ்வட்டத்தின் வெளியீடான "அறிவொளி" மூலம் மாணவர்களை மிகக் குறுகிய காலத்தில் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யவைப்பதும் அறிவை வளர்ப்பதுமேயாகும்.

இவ்வட்டத்தில் சேரும் ஒவ்வொரு மாணவ/மாணவியும் தங்களுக்கு விருப்பமான கலை/வர்த்தகத் துறை சம்பந்தமான ஒரு பாடத்தின் ஒரு கேள்விக்கான சிறந்த விடையினையும் எழுதி எமது மாணவ கல்வி வட்டத்தில் இணைவதற்காகப் பெயர், விலாசத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும். எமது வெளியீடு ஒவ்வொரு மாதமும் ஒரு **"அறிவொளி"** என்ற ரீதியில் வெளியிடப்படும்.

இத்திட்டத்தில் சேரும் மாணவ/மாணவியர் அடையும் பலாபலன்கள்:

1. ஒரு புத்தகத்தில் 25க்கு மேற்பட்ட சிறந்த வினாவிடையை அறிவொளி உள்ளடக்கியதாக இருக்கும்.
2. அதிசிறந்த வினாவிடை எழுதும் மாணவர் பெயர், விலாசம் எமது வெளியீட்டில் வெளியிடப்படும்.
3. ஒவ்வொரு இதழிலும் சிறந்த விடை என எமது ஆசிரியர் குழுவால் தீர்மானிக்கப்படும் மூன்று கட்டுரைகளுக்கு சிறந்த பரிசுத் திட்டத்தில் பங்குகொள்ளும் வாய்ப்பு அளிக்கப்படும்.
4. இத்தகைய சிறப்புடன் வெளிவரும் அறிவொளி கல்வி வெளியீட்டின் விலை 20/-ஆகும்.

எனவே கல்வி வட்டத்தில் இணைய விரும்பும் மாணவர்கள் எமது அறிவொளி இதழ் 1, 2க்கான கட்டணமாகிய 40/-வை தபாற்கட்டளையாகவோ, காசுக் கட்டளையாகவோ இணைத்து உங்கள் பெயர், விலாசத்துடன் அனுப்பவும்.

காசுக்கட்டளையை இயக்குநர் (DIRECTOR, B. T. C.) எனும் பெயருக்குப் பெறப்படும் கந்தோர் கொழும்பு என எழுதவும்.

**Bright Study Circle**
P. O. BOX, 162, COLOMBO. (ஏ-275)

உ

நாகபூஷணி நாராயணி
நம்பினோர்க்கருள்வாய் அம்மா!

**புதிய டிசைன்களில்**
**உத்தரவாதம் நம்பிக்கையான**
**தங்க வைர நகைகளுக்கு**
**சிறந்த ஸ்தாபனம்**

**இந்திரா ஜுவல்லறி**

ஓடர் நகைகள் குறித்த காலத்தில்
செய்து கொடுக்கப்படும்

**இந்திரா ஜுவல்லறி**
183, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

கடல் நடுவே எழுந்தருளி அருளாட்சி புரியும்
நயினை அன்னை அவள் அருள் வேண்டுவோம்!

மங்களப் பொருட்களுக்கு அனைவரும் மனம்
விரும்பி நாடுவது எங்கள் ஸ்தாபனமே!

O கோயில் அபிஷேகம், திருவிழாக்கள்
O கும்பாபிஷேகம், சங்காபிஷேகம்
O புதுமனைப் பிரவேசம்
O புதுமனைக்கு அத்திவாரமிடல்
O திருமண விழாக்கள்

முதலிய வைபவங்களுக்குத் தேவைப்படும்

**அபிஷேகத்திரவியங்கள்**
**விளைவுசூடம், சாம்பிராணி,**
**ஊதுபத்தி, வாசனைதிகள்**
**அஷ்டபந்தன மருந்து**

முதலிய சகல பொருள்களும்

**சந்தனம், குங்குமம்,**
**சுத்தமான பசு நெய்**

முதலியனவும் தங்கள் திருப்திக்கேற்ற வகையில்
எம்மிடம் கிடைக்கும்

O சேமியா O நெல்லிக்கிறஷ்
O பச்சைச் சந்தனம் O சித்த ஆயுள்வேத மருந்துகள்
O மருந்துச் சரக்குகள்

எப்பொழுதும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
வைத்தியர்களுக்கும், வியாபாரிகளுக்கும் தகுந்த
கமிஷன் வழங்கப்படும்.

**எஸ். சுப்பிரமணியம்**
**அன் கொம்பனி**

[மருந்து, மருந்துச் சரக்கு வாசனைதிகள் வியாபாரம்]

53, காங்கேசன்துறை வீதி. யாழ்ப்பாணம். தொலைபேசி: 22541

160, செட்டியார் தெரு, கொழும்பு—11 தொலை பேசி' 53582

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நினைவு கூருவோம்



குட்டி
(தீவுப்பகுதி)

இளந்தமிழ் வீரனே இனத்தின் விடுதலைக்காய்
செங்குருதி சிந்தினாய்
ஈழத்தாயும் ஈரவிழி சொல்கிறாள்
ஈழமகனே நீ மரணித்த போதிலும்
ஈழ மக்கள் இதயங்களில் வாழுகிறாய்

பெற்றோர்களும், நண்பர்களும்.

## 2-ம் வருட நினைவஞ்சலி



நரேஸ்குமார் முத்துத்தம்பி

பிறப்பு: 21—1—73 இறப்பு: 18—6—87

வாடாத மலராக மொட்டானாலும் நறுமணம் வீசிய எங்கள் செல்வமே 'நரேஸ்குமார்' எங்கள் நெஞ்சக் குடத்தில் நெருப்பைக் கொட்டி விட்டு மறைந்து இரண்டு ஆண்டானாலும், விண்ணில் தோன்றிய விடிவெள்ளியாகவே இன்றும் என்றும் உன் நினைவுடன் ஆறுதல் அடைகிறோம். உன் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

உன் பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணாமார், அக்காமார்,
தங்கச்சி, ஆச்சி, உற்றார், உறவினர்.

குரும்பசிட்டி ரோட்,
சுட்டுவன்.

(சி-2976)


**நியூசாந்தி** யாழ்நகர்
தினசரி 10-30, 2-30, 4-45
பயங்கரக் கராட்டிகள்
வாள்சண்டைகள், கார்
ஓட்டங்கள் நிறைந்த
படம்.
**MAJESTIC THUNDERBOLT**
(C/scope)



**ஹரன் சினிமா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30
சத்தியராஜ்-பிரபு
நடித்த
**சின்னத்தம்பி பெரியதம்பி**


### நயினாதீவில்

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஐந்துதலையுடைய சர்ப்பச்சிலை ஒரு விந்தையான அமைப்பு இந்த சர்ப்பச்சிலையின் முன் பாகந்தான் நாம் அம்பாளாக வணங்கும் அமைப்பு இருக்கின்றது. இந்தஅவமப்பு அமைக்கப்படுவதற்கு முன்னர் நாகம் மட்டுமே வழிபடு பொருளாக இருந்திருக்கின்றது. நாக வழிபாட்டில் நம்பிக்கை அருகி வந்த காலத்தில் அதற்குமுன்பாக ஒரு உருவத்தை ஸ்தாபனஞ் செய்து வழிபடத் தொடங்கியிருக்கலாம்.

இப்படியாக ஐந்துதலை நாகத்தின் படமெடுத்த அமைப்போடு கூடிய ஒரு வழிபடுபொருளை உலகில் வேறெங்கும் காணமுடியாது. இது நயினைக்கென்றே இயற்கையாய் அமைந்த தனிப்பெரும் சிறப்பு. வந்திப்போர் நினைத்தபடி அருள்சுரக்கும் இந்தத் திருக்கோல ஆராதனை சிறப்புடையது.

முழுமுதற் கடவுளாகிய சிவன் சர்ப்பத்தை ஆபரணமாக அணிந்திருப்பது கண்ணன் பாம்பின் தலைமேல் நடஞ் செய்யும் பாதத்துடன் காட்சியளிப்பதும், அமுதம் கடைந்தெடுக்க ஆதிசேடனைக் கயிறாக்கியும் எல்லாம் பாம்போடு தொடர்புடைய ஒரு பரம்பரையாகத் தெய்வசிந்தனைபரிணமிப்பதை நயினாதீவில் நாம் பார்க்கின்றோம். இதைவிட மூலமூர்த்தியை வழிபடுபவர்கட்குக் குண்டலினி சக்தியின் நினைப்பு மறப்பின்றி உண்டாக்கிறது.

#### பராசக்தியின் சூரத்தனம்

திருவிழாக் காலமாகிய இப்போது அன்னையின் அருட்பொலிவு என்ன மனோரம்மியமாக இருக்கும் என்பதை, நேரில் கண்டவர்களால்தான் வர்ணிக்க முடியும். அதன் மனோரம்மிய கொள்ளையழகை சொல்லில் வடிக்க முடியாது. அதனைக்காண ஆயிரம்கண்கள் வேண்டும்அதனைக்காணுதகண்களெல்லாம் ஊனக்கண்களேயாகும். இன்று அன்னையின் கடாட்சம்பெற அன்னை ஆலய சுற்றாடலில் திரண்டு நிற்கும் அடியார் கூட்டமும், ஆலய ஊனப்பும், வர்ணத்தேர் வரிசைகளும் எண்ணற்ற அடியார்கள் இசைக்கும் திருமுறைகளும், விண்ணினைப் பிளக்கும் ஆலய மணியின் ஓசையும் பண்ணமைந்த வேதமந்திர சுலோகங்களும், விரிந்து பரந்து செல்லும் வீதிகளில் வியாபாரம் செய்வோர் கொள்வோர் ஓசையும், உண்ணக் கிடைக்கும் உவப்பான அன்னதான அமுதும், அம்மா சொல்லிவிட முடியுமா? அவள் அன்னையின் சொல்லுக் கடங்காவே, பராசக்தியின் சூரத்தனமல்லவா என்று பாரதியின் வரிகள் நயினையில் ஆட்சி செய்கிறது.


**வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்**

பச்சிலைப்பள்ளி பல நோ. கூ. சங்கத்தில் 5000 வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. கேள்விப்படிவங்கள் ரூபா 100/- மீளப்பெறும் வைப்பாகச் செலுத்தி சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். ஏற்கனவே செலுத்தியோர் இம்முறை செலுத்தவேண்டியதில்லை. வெற்றுச் சாக்குகளை சங்க அலுவலக நேரங்களில் பார்வையிடலாம். விண்ணப்பங்கள் யாவும் 24-6-89 க்கு முன் முத்திரையிடப்பட்ட பதிவுத் தபால்மூலம் கீழ்க் காணும் முகவரிக்கு அனுப்பி வைத்தல்வேண்டும். தபால் உறைஇடதுபக்கமேல்மூலையில் ''வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொது முகாமையாளர்**
பச்சிலைப்பள்ளி
பல நோ. கூ. ச.

(எ-291)


### விளையாட்டுப் போட்டி

(புங்குடுதீவு)

புங்குடுதீவு விளையாட்டுக் கழகத்தின் அனுசரணையுடன் தீவுப்பகுதி பாடசாலை மாணவர்களுக்கிடையே உதைபந்தாட்ட, வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி ஒன்று எதிர் வரும் 24-ம் 25ம் திகதிகளில் நடைபெறவிருக்கிறது.

இப் போட்டியில் 17, 19 வயதுக்குட்பட்ட மாணவர்கள் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள்.

(உ)

## நினைவு கூருகிறோம்



இன்பம்
இ. ஜெயசில கிருஷ்ணன்

களத்திலே கதாநாயகனாய்
காவியம் படைத்தவனே!
எமது கண்ணீரை உமது கல்லறைக்கு காணிக்கையாக்கி உமது இலட்சியப் பாதையில் இணைகிறோம்.

பெற்றோர்கள், நண்பர்கள்.


''தேரேறும் நயினை நாகபூஷணித்தாயே
நல்லருள் புரிவாய் அம்மா!''

**"குவைத் நாட்டுக்கு உடனடி வேலைவாய்ப்பு"**

**VACANCIES IN KUWAIT**

| CATEGORY | SALARY |
|---|---|
| 1. Female Cleaners | KD 25 |
| 2. Aluminium Fitters | KD 75 |
| 3. AirPort Porters | KD 50 |
| 4. Black Smith (பூட்டுவேலை) | KD 75 |
| 5. Diesel Mechanics (Hvy Veh) | KD 80 |
| 6. Mechanic Asst | KD 65 |
| 7. Painter | KD 65 |
| 8. Hammer Smith (Denter) | KD 75 |
| 9. Auto Electrician | KD 75 |
| 10. Tyre Man | KD 55 |
| 11. Steel Fixer | KD 65 |
| 12. Pipe Fitter (Clay) | KD 65 |
| 13. Masons (Tile, Brick) | KD 65 |
| 14. Kuwait Licence Hvdriver | KD 95 |
| 15. Heavy Eqp Operator | KD 100 |

**VACANCIES IN OMAN**

| | |
|---|---|
| 1. Machinery Salesman | RO 150 |
| 2. Office Clerk (Male) | RO 70 |
| 3. Henna Designer | 70 |
| 4. Embrodery Tailors | 70 |
| 5. Ladies Dress Tailors | 70 |

**Vacancies In Saudi Arabia**

**CLEANERS — SR 350**

சகல தரப்பினருக்கும் எம்மிடம் வேலை வாய்ப்பு உண்டு. பாஸ்போட், 6 படம், அனுபவச் சான்றுடன் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். எக்காரணத்தைக் கொண்டும் முற்பணம் அறவிடப்படமாட்டாது:

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

**T. V. Travels**
Brown Road, Kokuvil.

(ஏ 286)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நச்சு வாயகி

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தத்துவார்த்த வளர்ச்சிப்பின்னணியைப் புரிந்துகொள்வதற்கு ‘கலை வளர்ச்சி’யையும் சமாந்தரமாயாராய்தல் வேண்டியதொன்ருகும்.

ஈழத்தின் தென்பாகத்தில், குறிப்பாக உருத்திரபுரம், மாமடு, சிகிரியா, இலுக்வேவ, பொலநறுவை, மாத்தளை, புத்தளம், அம்பாறை ஆகிய இடங்களில் சுடுமண்ணிலமைந்த பெண் பாவையுருவங்கள் காணப்படுகின்றன. இவற்றுக்கும் தமிழ் நாட்டுநீலகிரி மாவட்டத்திற் கண்டெடுக்கப்பட்ட பெண் தெய்வச் சிலைகளுக்குமிடையே நெருங்கிய ஒற்றுமையுண்டு. இவ்வம்சத்தின் காரணமாக ஈழ-தமிழக உறவுகள் குறித்த ஆராய்ச்சியின் அவசியத்தையும் நாம் கவனத்திற் கொள்ளல் வேண்டும். ‘பண்பாட்டு வரலாறு எமக்குமட்டும் உரித்தானதென்ற எண்ணம்’ சற்று அணுகி ஆராயப்படின் தெய்வ வழிபாட்டு மரபின் மூலம் துலக்கமாகலாம். எனவே இக் கட்டுரையிலிடம்பெறும் அம்சங்கள் முடிந்த முடிவானவையல்ல. மேலும் ஆர்வமுள்ளவர்கள் நுணுகி ஆராய்ந்து ‘ஆதியும் அந்தமும்’ கண்டுபிடித்து விளக்கம் பெறுவதற்கு முயல வேண்டுமென்பதே எமது விருப்பமாகும்.

தமிழகத்திலும் ஈழத்திலும் அன்னைவழிபாடும் நாகவழிபாடும் சங்கமித்திருந்த தன்மையினையும் நாம் காணலாம். ‘நாதாந்தசக்தி’ என்று சிறப்பிக்கப்படும் தன்மையினைக் கொண்டே ‘ஒலிக்கும் தெய்வமாக விளங்கும் சீர்மையறிந்தின்புறத்தக்கது. பாம்பு வணக்கம் ஆதிமக்களிடையே விளங்கியதும் அதன் இணைப்பு சக்தியோடும், சிவத்தோடும் சங்கமித்திருந்த தன்மையும் காணத்தக்கது. ஈழத்துச் சக்தி மரபில் ‘பத்தினி வழிபாடு’ பிற்காலத்தில் ஏற்பட்டது. இன்று சிங்களமக்கள் ‘பத்தினி தெய்யோ’ என்று அன்னை தெய்வத்தை வணங்கி வருகிருர்கள். ஆயினும் ‘அன்னை வழிபாடென்ற மரபு புறம்பானதொன்ருகவும், ‘பத்தினி வழிபாடு’ எனும் மரபு பிறிதொன்ருகவும் கிளைவிட்டுச் செழிப்புப் பெற்றன. புத்தளம் யாவட்டத்தில் கண்ணகி, திரெளபதி வடிவங்கள் தொல்பொருளாய்விற் பெறபப்பட்டன. விக்கிரகவியல் நோக்கில் நுட்பமான அமைப்பு வேலைப்பாடுகளைக் கொண்ட வடிவங்கள் வெளிக்கொணரப்பட்டு விளக்கப்பட்டுள்ளன. பார்க்கர் என்பவர் (1909) ‘துர்க்கை’க்கு விளக்கமளிக்கும் போது ‘நிற்கும் நிலையில் தலைவிரிகோலமாய்ச் சூலத்தைக் கையிலேந்தி விளங்கும் உருவத்தைத் துர்க்கை என்பர் என்று குறிப்பிடுகின்ருர்.

அனுராதபுரகால அரசர் காலத்தில் ‘ககபண’ தரிவு பணநாணயங்களிலே ஒருபக்கத்தில் ‘இலட்சுமி’ உருவம் காணப்படுகிறது.

திருகோணமலையில்உலோகத்தாலானபத்தின்சிலையொன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. கி. பி. 7ஆம் 8ஆம் நூற்ருண்டுக்காலத்து ஆண் – பெண் காட்சி-காதலர்கள் சிலை இசுறுமுனியாவில் உண்டு. அனுராதபுரத்தில் அழிபாட்டு நிலையில் காளி கோயிலுண்டு. பொலனறுவையிலும் காளி கோவிலுண்டு. சப்தமாதிருக்கைகள் (புடைப்புச் சிற்பங்களாயுள்ளவை) கிடைத்துள்ளன. மஹிஷாசுரமர்த்தனி உருவம் கொழும்பு பொருட்காட்சியகத்திலுண்டு. பொலநறுவைச் சிற்பங்களில் சரஸ்வதி சிலையுண்டு. நல்லூரில் கஜலெட்சுமி சிலையுண்டு என்று ஆய்வாளர் கூறுகின்றனர். பேராசிரியர் கா. இந்திரபாலா (1979) யாழ். கமால் வீதியில் துர்க்கையின் செப்புத் திருமேனி கிடைத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். தேவேந்திர முனைக்கும் பெந்தோட்டைக்குமிடையில் காளிகோயிலுண்டு. களுத்துறையில் காளி கோயிலுண்டு. (வேலுப்பிள்ளை ஆ. 1971).

ஐப்பானில் ‘யுனிசமா’ என்பது மலைத்தெய்வம். அதுவே 12 மாதங்களையும் பெற்றெடுப்பதுடன் மகப்பேற்றின் போது பெண்களுக்கும் உதவுகின்றதென்ற நம்பிக்கையுண்டு. இத்தகு தன்மைகள் காணப்படுவதனுல் சக்திவழிபாடு ஆதிவழிபாடாகவே அமைகின்றதென்பது பெறப்படுகின்றது.

பெற்றவளோடு பிள்ளை பழகச் ‘சட்ட திட்டம்’ கிடையாது. (No Rules) மாதாவைத் தெய்வமெனக் கொள்வாயாக என்கிறது தைத்திரிய உபநிடதம். காளிதாசனின் ‘சியாமள தாண்டவம்’ சரஸ்வதி மகிமையுடன் ஆரம்பமாகின்றது. இவ்வாறு இலக்கியச் சாட்ஷிகள் மிகுதியுமுள்ளன. அபிராமி யந்தாதியில் ‘நச்சு வாயகி’யாக அம்பிகையைக் குறிப்பிடும் பாடல் பாராயணத்துதியாக அமைகின்றது. அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிக வரம்பெறவாம். இது நிச்சயம்.

‘‘நாயகி நான்முகி நாரா
யணிகை நளினபஞ்ச
சாயகி சாம்பவி சங்கரி
சாமளை சாதிநச்சு
வாயகி மாலினி வாராகி
சூலினி மாதங்கியென்
ஆயகியாதி யுடையாள்
சரண மரணமக்கே.’’

## “இந்தியாவுடனும் இலங்கை பேச்சுநடத்த வேண்டும்”

## ரெலோ அறிக்கை

(யாழ்ப்பாணம்)

‘‘இலங்கை - இந்திய ஒப்பந்தம் செய்து கொண்ட இந்தியாவையும் அனைத்து தமிழ் விடுதலை அமைப்புக்களையும் இலங்கை அரசு அழைத்து பேச்சு நடத்துவதன் மூலமே இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்னைகளைத் தீர்க்கமுடியும்.’’

இவ்வாறு தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது:

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கை – இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக நாட்டில் இன்று ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட ஐந்து தமிழ் விடுதலை அமைப்புக்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்காங்கிரஸ் ஆகியனவும் இயங்கி வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் இந்தியப்படை உடன் இங்கிருந்து வாபஸ் பெறப்படவேண்டும் என்று இலங்கை அரசு அறிவித்திருந்தபோதிலும், இந்தியா தாம் செய்து கொண்ட ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்பட்டால்தான் தமது படைகள் இங்கிருந்து வாபஸ் பெறப்படும் என கூறியுள்ளது.

இதை நாம் சிந்தித்துப்பார்க்கும்போது இது நியாயமான பதில்தான் ஏனெனில் ஏற்கனவே தமிழர்கள் செய்து கொண்ட பண்டா - செல்வா ஒப்பந்தம், டல்லி - செல்வா ஒப்பந்தம் என்பன அரசால் புறக்கணிக்கப்பட்டன.

மேலும் நாம் சிந்திக்கையில் இலங்கை - இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டு இரண்டு வருடங்கள் பூர்த்தியாகின்றன. மாகாண சபை உருவாக்கப்பட்டு சுமார் 7 மாதங்கள் ஆகின்றன. ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழர்களின் உரிமைகள் இன்னமும் சரிவர நிறைவேற்றப்படவில்லை. அமைக்கப்பட்ட மாகாண அரசுக்கு அதிகாரங்கள் பூரணமாக வழங்கப்படவில்லை.

இலங்கை தமிழர்களின் பிரச்சினை தொடங்கிய காலந்தொட்டு தமிழர்களின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவையும் உதவியையும், வழங்கி வந்த இந்தியாவை புறக்கணித்து விட்டு இப்பிரச்னையில் நாம் வெற்றி காண முடியுமா?




பிரகாசமான சலவைக்கு

பிறைற் சோப்
உறைகளைச் சேகரியுங்கள்
பரிசுகளைப் பெறுங்கள்

பிறைற் சோப்
இன்டஸ்றீஸ் - மல்லாகம்.

(ஏ 233)

## இன்று

(யாழ்ப்பாணம்)

வண்ணை அருள்மிகு கதிர்வேலாயுத சுவாமி கோவிலில் இன்று ஞாயிற்றுக்கிழமை முதல் லஷ்சார்ச்சனை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

## 3 பொலிசார்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அனுராதபுரம் - கெப்பிட்டிகொலாவலில் தீவிரவாதிகள் மேற்கொண்ட கண்ணிவெடித் தாக்குதலில் பொலிஸார் மூவர் கொல்லப்பட்டனர்.

தெஹிவளையில் பஸ் ஒன்றுக்கு பாதுகாப்பளித்த பாதுகாப்புப் படையினரை நோக்கித் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டும், மற்ரெருரு படை வீரர் காயமடைந்துமுள்ளார். இச் சம்பவத்தின்போது பொதுமக்கள் மூவரும் காயமடைந்தனர்.

இதேவேளையில், கடுவலவில் இராணுவக் காவல்நிலையம் ஒன்றைத் தீவிரவாதிகள் தாக்கியபோது இராணுவத்தினர் மேற்கொண்ட எதிர்த் தாக்குதலில் தீவிரவாதி ஒருவர் கொல்லப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## நாளை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் பிரதிநிதிகளுடன் அரசு நாளை திங்கட்கிழமை பேச்சுக்கள் நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை போக்குவரத்துச் சேவையும் அத்தியாவசிய சேவைகளில் ஒன்ருக அரசு நேற்றுப் பிரகடனப்படுத்தியுள்ளது.

## பொலிஸ் - இராணுவ

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரதமர் ஜனுதிபதிக்கு விரைவில் சமர்ப்பிக்க உள்ளார்.

மேற்படி சங்கத்தினர் பாராளுமன்றக் கட்டிடத்தில் அமைந்துள்ள பிரதமரின் அலுவலகத்தில் அவரைச் சந்தித்து பேச்சு நடத்திய போதே பிரதமர் மேற்கண்ட இணக்கத்தை தெரிவித்தார்.

திரு. அ. அமிர்தலிங்கம், திரு. தினேஷ்குணவர்தன, பொலிஸ்மா அதிபர், இராணுவத்தளபதி, திரு. ரஞ்சன் விஜயரத்தன, திரு. தர்மசிரி சேனநாயக்கா, சி. வி. குணரத்ன, திரு. எஸ். பி. திசாநாயக்கா, திரு. திலக்கருணரத்ன உட்படபலர் இப்பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டனர்.

## கிளிநொச்சி, வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கைகள் கட்டப்பட்டநிலையில் சாவகச்சேரியிலுள்ள வங்கியொன்றின் முன்பாகக் காணப்பட்டது.

கைதடி கயிற்றசட்டி கந்தசுவாமி கோவிலருகே நேற்று முன்தினம் இருபகுதியினருக்குமிடையே துப்பாக்கிச்சண்டை இடம்பெற்றது.

கீரிமலைப் பகுதியில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் 13 வயதுச் சிறுவன் ஒருவன் காயமடைந்தார்.

## இந்தியப் படையினரின்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

பணிக்கு திரு. பந்த் தமது பாராட்டுக்களைத் தெரிவிப்பதாகவும் கூறினுர்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்துக்கு இந்தியா பாதுகாப்பாக உள்ளது. அமைதிப்படை மூலம் ஒப்பந்தத்தை பயனுள்ள வகையில் அமுல்படுத்த வேண்டியது இந்தியாவின் கடமை என்றும் அவர் தெரிவித்தார்.

## இந்திய அமைதி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையிலிருந்து இந்திய அமைதிப் படையை விலக்கிக் கொள்வது தொடர்பான இந்தியாவின் நிலையை விளக்கி இலங்கை ஜனுதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு இந்திய பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இன்று அல்லது நாளை விரிவான கடிதம் ஒன்றை அனுப்பிவைப்பார் என்று புதுடில்லி எதிர்பார்க்கும் அதேநேரத்தில்; இலங்கை ஜனுதிபதி ஆர். பிரேமதாசா நேற்று முன்தினம் வெளியிட்ட கருத்துக் குறித்து இந்தியா மிகவும் அதிர்ச்சியும், கவலையும் கொண்டிருப்பதாக அரசியல் அவதானிகள் புதுடில்லியில் தெரிவிக்கின்றனர்.

‘‘இந்திய அமைதி காக்கும் படை எவ்வாருயினும் வெளியேறியே ஆகவேண்டும். இதைத் தவிர வேறு பேச்சுக்கே இடமில்லை’’ என்று இலங்கை ஜனுதிபதி ஆர். பிரேமதாசா நேற்றுமுன்தினம் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சி மூலம் விடுத்த செய்தி தெரிவித்திருந்தது அறிந்ததே.

இலங்கை ஜனுதிபதியின் மேற்படி குறிப்பை கவனத்தில் கொண்டுள்ள இந்தியா; தனது இறுதிக்கட்ட நிலைப்பாட்டை அடுத்த நாற்பத்து எட்டு மணிநேரத்தில் வெளியிடும் என்று இந்திய வெளிவிவகார அமைச்சின் உயர்மட்ட அதிகாரிகளை பின்னணியாகக் கொண்டு அரசியல் அவதான்கள் நேற்று நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

## மரண அறிவித்தல்

### திருமதி நாகம்மா அழகரத்தினம்

(ஆசிரியை)



ஏழாலையைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி இராமநாதபுரம் வாசியுமாகிய ஆசிரியை திருமதி நாகம்மா அழகரத்தினம் 16ந் திகதி காலமாகிவிட்டார். அன்னுரின் இறுதிக் கிரிகைகள் 17ந் திகதி சனிக்கிழமை ஏழாலையில் பிற்பகல் 3-00 மணிக்கு நடைபெற்றது. இத்தகவலை உற்ருர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: மைத்துனர் நா. புலேந்திரன்
(வ. பி. டோ சபை சாலைப் பரிசோதகர்.)
அன்னுரின் பிள்ளைகளும்.

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(சி 2975)

இப் பத்திரிகை ‘ஈழநாடு’ லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1989ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sr iLanka under number B/1003e6/81. Eelanadu P. O. Box No: 49. Telegram, Eelanadu. Telephone; 22389. 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org